ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2074/39 - 2018 ජූනි මස 08 වැනි සිකුරාදා - 2018.06.08

2074/39 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டம்*

### *3 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க, உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர், மங்கள சமரவீர ஆகிய நான், இக்கட்டளை மூலம் ;*

(அ) 2018.02.15 ஆந் திகதிய 2058/34 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமான அறிவித்தலினை வெளியிடுவதன் மூலம் திருத்தியமைக்கப்பட்டவாறான 2017.11.09 ஆந் திகதிய 2044/32 ஆம் இலக்க, அறிவித்தல் மற்றும் அதன் கீழான கட்டளையின் II ஆம் அட்டவணையின் விடய இலக்கம் 1(ஆ) மற்றும் 1(இ) ஆம் பிரிவுகளின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளை என்பவற்றை, இதனகத்துக்குப் பின்னர் உள்ளவாறான பின்வரும் அட்டவணை “அ” இனை பதிலீடு செய்வதன் மூலம் திருத்தியமைப்பதற்கும், மற்றும்

(ஆ) 2018.02.15 ஆந் திகதிய 2058/34 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினை வெளியிடுவதன் மூலம் திருத்தியமைக்கப்பட்டவாறான 2017.11.09 ஆந் திகதிய 2044/32 ஆம் இலக்க அறிவித்தல் மற்றும் அதன் கீழான கட்டளையின் II ஆம் அட்டவணையின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையினை, இதனகத்துப் பின்னர் உள்ளவாறாக பின்வரும் அட்டவணை “ஆ” இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு திருத்தியமைப்பதற்கும், மற்றும்

இக்கட்டளையானது, 2018 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறுதல் வேண்டும் எனவும் பிரகடனப்படுத்துகிறேன்.

அத்துடன், 2018.02.15 ஆந் திகதிய 2058/34 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் 1989 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க உற்பத்தி வரி (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் வெளியிடப்பட்ட கட்டளையானது 2018.06.09 ஆந் திகதி முதல் பயன்வலுப் பெறும் வகையில் இரத்துச் செய்யப்படுகிறது எனவும் இத்தால் அறிவிக்கின்றேன்.

மங்கள சமரவீர,
நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்.

நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு,
கொழும்பு 01,
2018, யூன் 08.

1A - PG 4077 — 557 (2018/06)

இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

**அட்டவணை அ**

| இல. | விபரம் | உற்பத்தித் தீர்வை |
|---|---|---|
| (ஆ) | திருத்தப்பட்டவாறான, 2018.02.15 ஆந் திகதிய, வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2018 இன் கீழ் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றைப் பயன்படுத்தி அரச உத்தியோகத்தர் ஒருவரினால் | கொடுப்பனவு செய்யப்படவுள்ள தீர்வையில் இருந்து ரூபா 3.6 மில்லியனைக் கழித்ததன் பின்னரான தொகை |
| (இ) | திருத்தப்பட்டவாறான, 2016.10.31 ஆந் திகதிய, வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றறிக்கை இல. 210 (III) விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரத்தினைப் பயன்படுத்தி, வெளிநாடுகளிலுள்ள இலங்கைத் தூதரகங்களுக்கும் தூதரக அலுவலகங்களுக்கும் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் ஒருவரினால், | கொடுப்பனவு செய்யப்படவுள்ள தீர்வையில் இருந்து ரூபா 3.6 மில்லியனைக் கழித்ததன் பின்னரான தொகை |

**அட்டவணை ஆ**

2018.02.15 ஆந் திகதிய 2058/34 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலினை வெளியிடுவதன் மூலம் திருத்தியமைக்கப்பட்டவாறான 2017.11.09 ஆந் திகதிய 2044/32 ஆம் இலக்க, அறிவித்தல் மற்றும் அதன் கீழான கட்டளையின் II ஆம் அட்டவணையின் விடய இல. 4 இற்கு உடனடுத்துப் பின்வரும் விடயத்தினைப் புகுத்துவதன் மூலம் :-

| இல. | விபரம் | உற்பத்தித் தீர்வை |
|---|---|---|
| 5. | 2018.02.15 ஆந் திகதிய, வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கை இல. 01/2018 இற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட சலுகை அனுமதிப்பத்திரம், 2018.06.08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதம் என்பவற்றுடன் அரச உத்தியோகத்தர் ஒருவரினால் இறக்குமதி செய்யப்பட்டு, 2018.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் மீது | கொடுப்பனவு செய்யப்படவுள்ள தீர்வையில் இருந்து ரூபா 5.0 மில்லியனைக் கழித்ததன் பின்னரான தொகை |
| 6. | 2016.10.31 ஆந் திகதிய வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் 210 (III) ஆம் இலக்க, சுற்றறிக்கை மற்றும் அவற்றுடன் தொடர்புபட்ட திருத்தங்கள் என்பனவற்றிற்கு அமைய, விநியோகிக்கப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றினைப் பயன்படுத்தி, அரச உத்தியோகத்தர் ஒருவரினால், 2018.06.08 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் திறக்கப்பட்ட நாணயக் கடிதமொன்றினைப் பயன்படுத்தி இறக்குமதி செய்யப்பட்டு 2018.12.31 ஆந் திகதி அல்லது அதற்கு முன்னர் இலங்கைச் சுங்கத்திலிருந்து விடுவிக்கப்பட்ட மோட்டார் வாகனம் ஒன்றின் மீது | கொடுப்பனவு செய்யப்படவுள்ள தீர்வையில் இருந்து ரூபா 5.0 மில்லியனைக் கழித்ததன் பின்னரான தொகை |

06-1014

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.